மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1992–93 ஆம் ஆண்டில் கொளத்தூரில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையமும் ஒரு 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய முடிவிற்கு நன்றி. அதோடு அங்கே அந்தத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் நிலையத்திற்கு இன்னும் நிலம் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதோடு மத்திய அரசினுடைய மின் துறையினுடைய அனுமதியும் எதிர்பார்க்கப்படுகிறது. அது, கிடைத்ததும், அதைத்தான் குறிப்பிட்டேன். 1992–93-ல் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே, அப்பகுதியில் முழுவதும் விவசாயம் செய்யும்படியான கிட்டத்தட்ட 300க்கு மேற்பட்ட விவசாயிகளுடைய பம்ப் செட்டுகள் ஓடுகின்றன. அங்கே சீராக மின் ஓட்டம் இல்லாததால் திடீரென்று மோட்டார்கள் பழுதடைந்து,விவசாயம் நசிந்து போகும் நிலைமை தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிக்கிறது. அங்கு பயிரிடப்படும்படியான மிளகாய் போன்ற பயிர்கள் சரியான காலங்களில் விளைச்சல் இல்லாமல் நாசமாகும்படியான நிலைமை வளர்ந்து வருவதால், அந்தக் காலத்தை குறுக்கி, விரைவில் அந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, அதற்குரிய துரித நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கும் நிலைமையை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவேதான், இந்த மின் துணை நிலையத்தை அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

கிளை மின் நிலையப் பணி.

*9333—திரு. எ. ஏகாம்பர ரெட்டி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கே. ஜி. கண்டிகை கிளை மின் நிலையப் பணிக்கு ஒப்புதல் அளித்தும் இதுவரை ஏன் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கே. ஜி. கண்டிகையில் ஒரு 33/11 கே. வி. துணை மின் நிலையமும், 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியும் அமைக்கும் பணி எட்டாவது திட்டக் காலத்தில் அதாவது 1990-91 ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகளில் சேர்க்கப் பட்டுள்ளது. மின் நிலையத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட பணிகள் நடந்து வருகின்றன. விரைவில் இம்மின் நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

(ஆ) மொத்தம் 59 லட்சம் ரூபாய் செலவு ஆகும்.

உடல் ஊனமுற்றவர்கள் அரசு பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ்.

*2644—திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) உடல் ஊனமுற்றவர்கள் அரசு பஸ்களில் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

விவர அறிக்கை.

(1) கண்பார்வையற்றவர்கள், வாதநோய் அல்லது வேறு வகையிலோ கை மற்றும் கால் உறுப்புகளில் ஒன்று அல்லது இரண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சான்றிதழ்படி அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலம் வரை மருத்துவ சான்றிதழ் 3 வருடத்திற்கு மேல் நீட்டித்திருக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, சென்னையிலிருந்து, 15 கி. மீ. தூரம் வரை அவர்கள் பயணம் செய்ய பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இலவச பயண சலுகை வழங்கப்படுகிறது.